செ.வெ.எண்:29/2019 நாள்:09.08.2019

## திண்டுக்கல் மாவட்டம்

# அரசு மானியத்துடன் கூடிய கூடுதல் தீவன அபிவிருத்தி திட்டம் 2019-20 செயல்படுத்தப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

கால்நடை வளர்ப்போர், கால்நடை தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும், அரசு கூடுதல் தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தவுள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம், நடப்பு நிதியாண்டில், அரசு மானியத்துடன் கூடிய கீழ்க்கண்ட தீவனப்பயிர், கூடுதல் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், செயல்படுத்தப்படவுள்ளது.

இறவை பாசனம் அல்லது மானாவாரி நிலத்தில், விவசாயிகள் சோளம் மற்றும் தட்டப்பயறு பயிரிட, 3 கிலோ தீவன சோளம் (Fodder Sorghum) மற்றும் 1 கிலோ தீவன தட்டப்பயறு (Fodder Cowpea) மற்றும் உரங்கள் (யூரியா, பொட்டாஷ் மற்றும் சூப்பர்பாஸ்பேட்) அடங்கிய தீவன விதை முடிச்சு (Fodder Seed Kit) வழங்கப்படவுள்ளது. பயனாளிகளுக்கு குறைந்தது 0.25 ஏக்கர் முதல் அதிகபட்சம் 2 ஏக்கர் வரை மானியம் (Subsidy) வழங்கப்படவுள்ளது.

மேற்காணும் திட்டத்தின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு, பயன்பெற தகுதியிருப்பின், விருப்பமுள்ள திட்டங்களை தேர்வு செய்து எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---